## செய்தி வெளியீடு

## போலி குடும்ப அட்டைகள் கணக்கெடுக்கும் பணி மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் வீடு வீடாக சென்று ஆய்வு

போலி குடும்ப அட்டைகளை முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு, முதற்கட்டமாக கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களிலும், சென்னையில் அண்ணாநகர் மற்றும் சேப்பாக்கம் மண்டலங்களிலும் வீடு வீடாக சென்று தலத் தணிக்கைப் பணி மேற்கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2,09,362 மற்றும் திருச்சி மாவட்டத்தில் 1,03,104 குடும்ப அட்டைகளும் போலியானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. அண்ணாநகர் மற்றும் சேப்பாக்கம் மண்டலங்களில் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

இரண்டாம் கட்டமாக வேலூர், கடலூர், தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், நாகப்பட்டினம், தேனி, தூத்துக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 10 மாவட்டங்களில் கணக்கெடுக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்புப் பணியின் முன்னேற்றம் தொடர்பாக மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் 31.10.2008 அன்று சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம், தீவட்டிப்பட்டி, பூசாரிப்பட்டி, ஓமலூர் நகரில் அண்ணாநகர், புளியம்பட்டி ஆகிய பகுதிகளிலும், 1.11.2008 அன்று நாமக்கல் மாவட்டத்தில் வேலூர் வடக்கு தெரு, மரவாப்பாளையம் குளித்தெரு, பரமத்தி டவுன் பாவடித் தெரு, தில்லைகளத்தூர் நடுத் தெரு, ராசாம்பாளையம் மற்றும் கரூர் மாவட்டத்தில் மண்மங்கலம், வாங்கப்பாளையம், ஆகிய பகுதிகளில் தெரு தெருவாக, வீடு வீடாகச் சென்று தலத் தணிக்கை செய்யப்பட்ட படிவங்களைப் பெற்றுக் கொண்டு, பொது மக்களை நேரடியாக விசாரணை செய்து தலத் தணிக்கையின் மெய்த்தன்மையை அறிந்தார்கள். அங்கே கூடியிருந்த பொது மக்களிடம் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருட்கள், அளவு போன்றவற்றை கேட்டறிந்தார்கள்.

31.10.2008 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாலை 4.30 மணிக்கும், 1.11.2008 அன்று காலை 11.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், அன்று மாலை 3.00 மணிக்கு கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் தலத் தணிக்கை மண்டல அலுவலர்களின் கூட்டத்தினை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்கள். சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரப்பாண்டி ஆறுமுகம் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றார். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் தலத் தணிக்கைப் பணி சேலத்தில் 9%-ம், நாமக்கல்லில் 11%-ம், கரூரில் 1% பணி மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது என்றும், மேல் தணிக்கைப் பணியினை தீவிரப்படுத்தவும் அறிவுரை வழங்கினார்கள். போலி குடும்ப அட்டைகளை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அரசு ரூ.13,05,22,750/- நிதி ஒதுக்கீடு செய்து இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இப்பணியை சிறப்பாக செய்யக் கேட்டுக் கொண்டார்கள். இப்பணியை மேற்கொள்ள தலத்தணிக்கை அலுவலர்களுக்கு உரிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தில் கணினி பதிவின் அடிப்படையில் விவரங்கள் ஆய்வுக்காக வழங்கப்பட்டுள்ளது. வெளியூரிலிருந்து வந்தவர்கள் குறித்த விவரங்கள் தலத் தணிக்கை படிவங்களில் இருக்காது. வெளியூர்களிலிருந்து வந்து வசிப்பவர்களின் விவரங்களை தனியாக வழங்கப்பட்டுள்ள தலத்தணிக்கை படிவங்களில்

பூர்த்தி செய்து வழங்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள், அவர்களுடைய உதவியாளர்கள் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் தலத்தணிக்கை படிங்களை பூர்த்தி செய்யக் கூடாது. வீடு வீடாக சென்று தலத் தணிக்கை செய்ய வேண்டும். படிவங்களை பென்சிலால் பூர்த்திசெய்யக் கூடாது. வீட்டை காலி செய்து விட்டு போகும்போது அவர்களுடைய குடும்ப அட்டைகளை வீட்டு உரிமையளரிடம் ஒப்படைத்து செல்கின்றனர். இதனை தலத் தணிக்கை ஆய்வு அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். தலத் தணிக்கை படிவங்களை பெறும்போது உரிய ஒப்புதல் பெற வேண்டும். தணிக்கை நிறைவு பெற்றவுடன் மீதமுள்ள படிவங்களை ஒப்புதல் பெற்றுக்கொண்டு ஒப்படைக்க வேண்டும். திரும்ப ஒப்படைக்கும் தலத் தணிக்கை படிவங்களை பயன்படுத்தி தவறான குடும்ப அட்டை வழங்கப்படாமல் அலுவலர்கள் பாதுகாக்க வேண்டும். கூட்டு குடும்பங்களில் இரண்டு எரிவாயு இணைப்பு பெற்றிருந்தால், இரண்டு குடும்ப அட்டைகள் இருக்க வாய்ப்புள்ளது. இது குறித்தும் தக்க ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். தலத் தணிக்கை அலுவலர்கள் இப்பணியில் தங்களை முழுமையாக எந்தவித நிர்பந்தத்திற்கும் ஆளாகமலும், போலி குடும்ப அட்டை என கண்டறியும் படிவங்களை உரிய நடவடிக்கைக்காக உடன் சமர்ப்பிக்க வேண்டும். போலி குடும்ப அட்டைகளை கணக்கெடுக்கும் பணியில் தணிக்கை அலுவலர் வற்புறுத்தப்பட்டால் உடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு உடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளும் போதே இதுவரை குடும்ப அட்டை வாங்காதவர்கள், குடும்ப அட்டை வாங்க விண்ணப்பம் கொடுத்தவர்கள், விலாசம் மாறி வசிப்பவர்கள், வெளி மாவட்டங்களுக்கு மாறுதலாகி சென்ற பணியாளர்கள் போன்ற விவரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்த விவரங்களின் அடிப்படையில் உண்மையான விலாசத்தில் உரியவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை வழங்கப்படும். வீடு மாறியவர்களுக்கு குறிப்பிட்ட அட்டையில் உடனடியாக விலாச மாற்றம் செய்து தரப்படும். உண்மையான குடும்ப அட்டைகள் கணக்கெடுப்பப்படுவதால் பயனாளிகள் தேவைப் பட்டியல் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் உரிய பொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் உரையைத் தொடர்ந்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் தவறான குடும்ப அட்டைகளை ரத்து செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை என்றும் தலத் தணிக்கைப் பணியாளர்கள் தலத் தணிக்கைப் படிவங்களில் சரியான விவரங்களை குறிப்பிட வேண்டும் என்றும், சேலம் மாநகரில் அனைத்து தெருக்களிலும் வீட்டு அடையாள எண் எழுதப்பட்டுள்ளது. அதனால் கணக்கெடுப்புப் பணியில் எவ்வித பிரச்சினைகளும் இருக்காது என்றும், தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசு அனைத்து நலத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது எனவும் தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு இ. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோர் பங்கு பெற்றனர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.